# UNIVERSITY OF PERADENIYA

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - පැරණි නිර්දේශය) පරීක්ෂණය - 2020

பொதுக்கலைத் தேர்வு (வெளிவாரி – பழைய பாடத்திட்டம்) - 2020

**Bachelor of Arts (External - Old Syllabus) Examination - 2020**

## *PGH I – பொது உளவியல்*

කාලය පැය(**03**) තුනයි.
மூன்று(03) மணித்தியாலங்கள்
Time three (**03**) Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න 5 පිළිතුරු සපයන්න.
5 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
Answer 5 questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 5 කි.
இந்த வினாப்பத்திரத்தில் 5 வினாக்கள் உள்ளன.
There are 5 questions in the question paper.

---

01. 'உளவியல் என்பது மனிதர்களினதும் பிற விலங்குகளினதும் உளநிலைகள், செயல்முறைகள் மற்றும் நடத்தை ஆகியவை பற்றிய விஞ்ஞான ஆய்வாகும்.' தெளிவுபடுத்துக.

02. அனுபவ உளவியலில் பயன்படுத்தப்படும் பின்வரும் ஆராய்ச்சி முறைகளைப் பற்றி நுணுகி மதிப்பிடுக.
    i. பரிசோதனை முறை
    ii. தனிநபர் விசாரணை முறை

03. ஒன்றில் அமைப்பியல் வாதத்திலிருந்து செயல்பாட்டியல் வாதத்தை வேறுபடுத்துக.
    அல்லது
    சிக்மன் புரோய்டின் உளப்பகுப்பாய்வினை சுருக்கமாகத் தந்து அதற்கு ஜாக்ஸ் லக்கான் எவ்வாறு எதிர்வினையாற்றினார் என்பதை எடுத்துக்காட்டுக.

04. i. ஆளுமை எண்ணக்கருவை நீர் எவ்வாறு விளங்கிக்கொள்வீர்?
    ii. உமது தேர்வுக்குறிய ஒரு ஆளுமைக் கோட்பாட்டைக் கூறி அதனை ஆராய்க.

05. உமது கருத்தில் நடத்தைவாதிகளின் கற்றல் கோட்பாட்டின் உளவியல் முக்கியத்துவம் யாவை?

06. ஊக்கி என்றால் என்ன? ஊக்கி குறித்த ஏதேனும் ஒரு கோட்பாட்டின் சமூகவியல் மற்றும் உளவியல் முக்கியத்துவத்தை ஆராய்க.

07. பியாஜேயின் அறிவுசார் விருத்திக் கொள்கையின் பிரதான வலியுறுத்தல்கள் யாவை?

08. ஒருவரின் நுண்ணறிவை மரபும் (Heritage) சூழ்நிலையும் (environment) தீர்மானிக்கின்றது என்று கூறுவது சரியா? உமது விடைக்கு நியாயங்கள் தருக.

09. "கொரோனா பீதியிலிருந்து எமது உள ஆரோக்கியத்தை எவ்வாறு பாதுகாப்பது" எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

10. பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டினைப் பற்றி கருத்துரைக்க
    i. மன அழுத்தம்
    ii. மனவெழுச்சிகள்
    iii. சிறுவர் தவறான பிரயோகம்
    iv. புலன் உணர்ச்சியும் புலன் காட்சியும்
    எ. குறுகிய கால நினைவும் நீண்டகால நினைவும்